செ.வெ.எண்:13 நாள்:05.07.2021

கோயம்புத்தூர் மாவட்டம்

# இணையவழியாக நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து இணையவழியாக நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று(05.07.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். இணையவழிகூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சரண்யா இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வாரமும் திங்கள் அன்று மக்கள் குறைதீர்க்கும் நாள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வந்தது. தற்போது கொரோனா பேரிடர் காலத்தில் பொதுமக்களின் நலன் கருதி, அரசின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை இணையவழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், பொது மக்கள் சேவை மையம் / இ-சேவை மையம் ஆகியவற்றின் மூலமும் கோரிக்கை மனுக்களை சமர்ப்பிக்க தமிழ்நாடு அரசால் உத்தரவிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 11 தாலுகாவிற்கு துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட அலுவலர்கள் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து, இணையவழியாக நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பட்டாமாறுதல், நில அளவை, புதிய குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம், ஆக்கிரமிப்பு அகற்றுதல், வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை அந்தந்த பகுதியில் உள்ள வட்டாட்சியர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

இணையவழியாக நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்கள் அளித்த பொதுமக்களிடம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கைகளை கேட்டறிந்தார். மேலும், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீதான நடவடிக்கைகளை குறித்த காலத்திற்குள் விரைந்து மேற்கொள்ளுமாறு டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு திங்கட்கிழமைதோறும், இணையவழியாக மக்கள் குறைதீர்க்கும் நாள் நடைபெறும். பொதுமக்கள் அந்தந்த பகுதியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களில் தங்கள் கோரிக்கை மனுக்களை வழங்கலாம்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**